பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
13 03 2026 FRIDAY - 7 15 AM
ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு நரேந்திர மோடி, அஸ்ஸாமில் 24 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைக்கிறார்.
- நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் உடல் ஆரோக்கியத்தில் யோகா முக்கிய பங்காற்றுவதை அறிவியல் ஆய்வுகள் நிரூபித்துள்ளதாக ஆயுஷ் துறை இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.
- மேற்காசிய பகுதிகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படும் என்று ஈரானின் உயர் தலைவர் திரு மொஜ்தபா காமேனி எச்சரித்துள்ளார்.
- மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களின் சில பகுதிகளில் இன்று வெப்பம் அதிகரிக்கக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- சுவிஸ் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>>><<<<<<

அஸ்ஸாமில் 24 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

இரண்டு நாள் பயணமாக அம்மாநிலத்திற்கு செல்லும் பிரதமர், பிற்பகலில் கோக்ரஜாரில் நடைபெறும் நிகழ்ச்சியில், 4 ஆயிரத்து 570 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

கோக்ரஜார் பகுதியில் ரயில்வே மற்றும் தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை அவர் தொடங்கி வைக்கவுள்ளார்.

பின்னர், இன்று மாலை குவஹாத்தி செல்லவுள்ள பிரதமர், 19 ஆயிரத்து 480 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைக்கவுள்ளார்.

2 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள Kopili நீர்மின் நிலையத்தை அவர் தொடங்கி வைக்கிறார்.

நாளை Sinchar-ல் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் 23 ஆயிரத்து 550 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை பிரதமர் தொடங்கி வைக்கவுள்ளார்.

>>>>>>><<<<<<<

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், இந்தோனேசிய வெளியுறவு அமைச்சர் திரு. Sugiono-வுடன் தொலைபேசி வாயிலாக பேச்சு நடத்தினார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு ஜெய்சங்கர், இருதரப்பு உறவுகள் குறித்தும், மேற்காசிய நிலவரம் குறித்தும் அவருடன் விவாதித்தாக குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையிலான கூட்டு ஆணையக் கூட்டத்தை விரைவில் நடத்துவது குறித்தும் இந்தோனேசிய அமைச்சருடன் ஆலோசனை மேற்கொண்டதாக திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்

>>>>>>><<<<<<<

மாநிலங்களுக்கு இடையேயான கூட்டுறவு சங்கங்களின் தேர்தல்களை வெளிப்படையாக நடத்த, தேசிய கூட்டுறவு தேர்தல் ஆணையம் நிறுவப்பட்டுள்ளதாக மத்திய கூட்டுறவுத் துறை இணையமைச்சர் திரு கிரிஷன் பால் குர்ஜார் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இது தொடர்பாக நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் பேசிய அவர், கூட்டுறவு அமைப்புகளை மேம்படுத்த பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

கூட்டுறவு தேர்தல் ஆணையம் இதுவரை சுமார் 240 தேர்தல்களை நடத்தியுள்ளதாகவும், வரும் ஆண்டில் 130 தேர்தல்களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவம் திரு கிரிஷன் பால் குர்ஜார் கூறினார்.

>>>>>>><<<<<<<

சர்வதேச யோகா தினத்திற்கான 100 நாள் கவுண்ட்டவுன் இன்று தொடங்குவதையொட்டி தில்லியில் மத்திய ஆயுஷ் அமைச்சகம் சிறப்பு யோகா நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழச்சியில் மத்திய ஆயுஷ் இணையமைச்சர் திரு பிரதாப்ராவ் ஜாதவ் பங்கேற்கிறார்.

100 நாட்களில் 100 இடங்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்றும், இதில் யோகாவின் நன்மைகளை மக்களிடையே எடுத்து கூறும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்றும் ஆயுஷ் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே மத்திய இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் எழுதியுள்ள சிறப்புக் கட்டுரையில், நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் உடல் ஆரோக்கியத்தில் யோகா முக்கிய பங்காற்றுவதாக தெரிவித்துள்ளார்.

இது அறிவியல் ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யோகாவை அனைவரும் அன்றாட வாழ்வில் பின்பற்றி, பயனடைய வேண்டும் என்றும் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனிடையே, இந்தக் கட்டுரையை சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, கடந்த பத்து ஆண்டுகளில், யோகா பெரிய அளவில் பிரபலம் அடைந்துள்ளதாகக் கூறியுள்ளார்.

யோகாவின் நன்மைகளை உலகம் புரிந்து கொண்டுள்ளதாகவும் பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>>><<<<<<<

நாடு முழுவதும் பல்வேறு நீதிமன்றங்களைச் சேர்ந்த 660 கோடி பக்க பதிவுகள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாக மத்திய சட்டத் துறை இணையமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வால் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் இது குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், நீதிமன்றங்களில் டிஜிட்டல் மயமாக்க நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நீதிமன்ற நடவடிக்கைகளை நேரடியாக ஒளிபரப்பும் வசதி 11 உயர்நீதிமன்றங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நீதிமன்றங்களை டிஜிட்டல் மயமாக்குவதற்கு மூன்றாம் கட்டமாக 7 ஆயிரத்து 210 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் திரு அர்ஜுன் ராம் மேக்வால் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<

ஆந்திராவின் இந்துப்பூருக்கு அருகில் மின்னணு நகரத்தை உருவாக்குவது குறித்து மாநில அரசு பரிசீலித்து வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

அமராவதியில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் பேசிய அவர், மாநிலத்தில் படைப்பாற்றல் பொருளாதாரத்தை மேம்படுத்த அமராவதியில் படைப்பாற்றல் நகரம் அமைக்கப்படும் என்றார்.

சிறப்பு பொருளாதார மண்டல மேம்பாட்டு முயற்சியின் கீழ் விசாகப்பட்டினம், அமராவதி, திருப்பதி ஆகிய நகரங்களை அரசு மேம்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

சுற்றுலாத் துறையில் ஆந்திரா ஏராளமான வாய்ப்புகளைக் கொண்டுள்ளதாகவும், இத்துறையில் முதலீடுகளை ஈர்க்க மாவட்ட ஆட்சியர்கள் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்றும் திரு சந்திரபாபு நாயுடு கேட்டுக் கொண்டார்.

>>>>>>><<<<<<<

மத்தியப்பிரதேசத்தின் வளர்ச்சிக்கு மத்திய அரசு உறுதுணையாக இருப்பதாக அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் யாதவ் கூறியுள்ளார்.

தில்லியில் நேற்று மத்திய அமைச்சர்கள் திருமதி நிர்மலா சீதாராமன், திரு சிவராஜ் சிங் சௌஹான், திரு சி.ஆர். பாட்டீல் ஆகியோரை அவர் சந்தித்துப் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் தொடர்பான கோரிக்கைகள் அவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டதாக தெரிவித்தார்.

மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த கடுகு மற்றும் துவரை விவசாயிகளின் நலன் காக்கும் வகையில் முக்கிய முடிவுகளுக்கு வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் ஒப்புதல் அளித்திருப்பதாகவும் திரு. மோகன் யாதவ் கூறினார்.

>>>>>>><<<<<<<

மேற்காசிய பகுதிகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படும் என்று ஈரானின் உயர் தலைவர் திரு. Mojtaba Khamenei எச்சரித்துள்ளார்.

அந்நாட்டின் உயர் பொறுப்பை ஏற்ற பின்னர், முதன்முறையாக நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றினார்.

தங்களது இலக்கு அமெரிக்க ராணுவ தளங்கள் மட்டுமே என்றும், அண்டை நாடுகள் மீது தாக்குதல்நடத்தும் எண்ணம் இல்லை என்றும் அவர் கூறினார்.

அமெரிக்க தளங்கள் மீதான தாக்குதல் வரும் நாட்களில் தீவிரப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

Hormuz நீரிணைப் பகுதி தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் என்றும் திரு. Mojtaba Khamenei கூறினார்.

>>>>>>>>>>>>>>>>

நாகாலாந்து ஆளுநராக திரு நந்த் கிஷோர் யாதவ் இன்று பதவியேற்கிறார்.

அம்மாநில ஆளுநராக பதவி வகித்த இல கணேசன் காலமானதை அடுத்து மணிப்பூர் ஆளுநர் திரு அஜய் குமார் பல்லா கூடுதலாக நாகாலாந்து ஆளுநர் பொறுப்பை வகித்து வந்தார்.

>>>>>>>>>>>>>>>>

குஜராத் மாநிலத்தில் தொழிற்கல்வி பயிலும் மாணவர்கள் மின்சார வாகனத் தொழிலில் பயிற்சி பெற மாநில அரசு முன்னுரிமை அளித்து செயல்படுவதாக முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல் கூறியுள்ளார்.

காந்திநகரில் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்காக 40 மின்சார வாகனங்கள் மற்றும் கார்களை அரசு தொழில் பயிற்சி நிறுவனத்துக்கு நேற்று அவர் வழங்கினார்.

மின்சார வாகனத் தொழில் துறையில் முதல் கட்டமாக 8 ஆயிரம் மாணவர்கள் சிறப்புப் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகளை அரசு ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இத்துறையில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக திரு பூபேந்திர படேல் தெரிவித்தார்

>>>>>>>>>>>>>>>>

நாட்டின் வளர்ச்சியை விரைவுபடுத்த பெண்கள் அதிக அளவில் தொழில்நுட்பக் கல்வி பயில வேண்டும் என தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா கூறியுள்ளார்.

தில்லியில் உள்ள இந்திரா காந்தி மகளிர் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் நேற்று உரையாற்றிய அவர், தொழில்கல்வியில் மகளிரின் பங்களிப்பை அதிகரிக்க தில்லி அரசு உறுதிபூண்டுள்ளது என்று கூறினார்.

*பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டுள்ள டிஜிட்டல் முன்முயற்சிகள், மகளிருக்கு அதிகாரம் அளிப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளதாக திருமதி ரேகா குப்தா தெரிவித்தார்*

*>>>>>>><<<<<<<*

*மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களில் சில பகுதிகளில் இன்று வெப்பம் அதிகரிக்கக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*கடலோர கர்நாடகா மற்றும் கேரள மாநிலத்தில் சில பகுதிகளிலும் வெப்பம் அதிகரிக்கும் என்று அந்த மையம் கூறியுள்ளது.*

*அருணாச்சலபிரதேசத்தின் ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*சத்திஷ்கட், மேற்குவங்கம் மற்றும் சிக்கிமில் சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*சுவிஸ் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-15, 15-21, 28-26 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Okamura – Yamashita இணையை வென்றது.*

*>>>>>>><<<<<<<*

*உலக பாரா கிராண்ட்ஃப்ரீ தடகள சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Sumit Antil தங்கப்பதக்கம் வென்றார்.*

*புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*இப்போட்டியில் இந்தியா நேற்று மட்டும் 12 தங்கப்பதக்கங்களை வென்றது.*

*>>>>>>><<<<<<<*

*உலக பாரா சேலஞ்சர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Bhavinaben Patel பட்டம் வென்றார்.*

*>>>>>>><<<<<<<*

உலக கோப்பை மகளிர் ஹாக்கி தகுதிச் சுற்று போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இத்தாலியை எதிர்கொள்கிறது.

>>>>>>><<<<<<<